ஸாம்ப்ரதாயிக வ்யவஹாரங்களில் "தென்னாசார்யர்கள்" என்றும் "தென்னா
சார்ய ஸம்பிரதாயம்" என்றும் வ்யவஹரிக்கப்பட்டு வருவதைக் காணா நின்றோம்.
இதற்கு எதிராக வடவாசார்யர்களென்கிற வ்யவஹாரமிருந்து வருகிறதாவென்று
பார்த்தால் அப்படியொரு வ்யவஹாரமிருப்பதாக எங்குங் கண்டதுமில்லை,
கேட்டதுமில்லை, தென்கலை, வடகலை என்கிற ப்ரயோகம் மட்டும் தொன்று தொட்டு
வந்திருக்கிறது. கம்பராமாயணத்தின் ஆரம்பப் பகுதியில் "வடகலை தென்கலை
வடுகு கன்னடம்" என்கிற செய்யுளிருப்பது ப்ரஸித்தம். ஆனால் இது பாஷையைப்
பற்றினது. ஸம்ஸ்க்ருதம் தமிழ் தெலுங்கு கன்னடம் என்கிற பாஷைகளையே
அங்குக் கம்பர் விவக்ஷித்திருக்கிறாரென்பது அவ்விடத்திலேயே இரண்டாமடி
யினால் ஸ்பஷ்டம். வடகலையான ஸம்ஸ்க்ருதத்தை விசேஷித்து ஆதரிப்பவர்கள்
வடகலையார்; தென்கலையான தமிழை விசேஷித்து ஆதரிப்பவர்கள் தென்கலையார்
என்று கொண்டு இந்த வ்யவஹாரம் நிகழ்வதாயிற்று. ஆனால் இஃது என்றைக்கு
நிகழத் தொடங்கிற்று? இந்த வ்யவஹாரத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகர் யார்?
என்று கேட்டால் விடை கூறமுடியாது. இது முன்னோர்களின் நூல்களில் ஏறி
யிருப்பதுமன்று. நீதி மன்றத்துக் காகிதங்களில் நிறைய ஏறியிருக்கின்றதென்
பது தெரிந்ததே. வடகலை தென்கலையென்கிற இந்த சொற்களுக்கும் புண்ட்ரத்
திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லாதிருக்கவும், இருவகையாகாரமுள்ள திருமண்
காப்புக்குத் தென்கலை நாமமென்றும், மற்றொருவகை யாகாரத்திற்கு வடகலை
நாமமென்றும் வ்யபதேசம் உண்டாயிருப்பது இனி மாறப்போகிறதில்லை.
தென்னாசார்ய ஸம்பிரதாயம் என்கிற வ்யபதேசம் மட்டும் சிறிது ஆழ்ந்து ஆராயத்
தக்கது. "வடவாசார்யர் என்கிற ப்ரதிநிர்தேசம் அடியோடில்லாமல் தென்னா
சார்யரென்கிற வ்யபதேசம் மட்டுமே நிகழ்ந்து வருதலால் இந்த வ்யபதேசத்
திற்கு இலக்கானவர்கள் யாவர்? என்று ஆராயவேண்டுவது அவசியமாகிறது.

விவாதப் பேச்சுக்களில் தலையிடாத பரமஸாத்விகர்களான பெரியார்களும்
'தென்னாசார்யர்கள், தென்னாசார்ய ஸம்பிரதாயம்' என்கிற வ்யபதேசங்களை வழங்கி
வருதலால் இதற்கு இலக்கானவர்கள் யாவர்? என்று பிராமாணிகமாக விமர்சித்து
முடிக்கவேணும். இந்த வ்யபதேசமானது தென்கலையார் என்கிற வ்யபதேசம்

பேரலே இக்காலத்தவர்களை நோக்கியதன்று. பூருவாசாரியர்களையே நோக்கியதென்பதில் ஐயமில்லை. ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் முதலான ஸ்ரீவைஷ்ணவாசாரியர்களனைவரும் தென்னாசாரியர்களெனப்படுவர். சக்ரவர்த்தி திருமகனார் அகஸ்த்யாச்ரமத்தருகேயெழுந்தருளும்போது இளையபெருமாளை நோக்கி "தக்ஷிணா திக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணா" என்று அகஸ்திய முனிவர் பெருமையைக் கூறுகின்றார். குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் அகஸ்திய முனிவரை "வண்டமிழ்மாமுனி" என்றே வ்யபதேசிக்கிறார். தேசிகனும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் "ஸூக்த அகஸ்த்ய ப்ரஸூதா த்விதி பரிஜக்ர்ஹே" என்றும், பாதுகாஸஹஸ்ரத்தில் "கும்பீஸம்பூதநோஸ்ஸுர கபலக்ராஸிநஸ் ஸ்வைர பாஷா" என்றும் பெருமதிப்புத் தோற்றப் பேசியுள்ளார். ஆக, ஆழ்வார்களின் ஸம்ப்ரதாயத்தில் ஊற்றமுள்ள ஸ்ரீவைஷ்ணவாசாரியர்களனைவரும் தென்னாசார்யர்களென்கிற வ்யபதேசத்திற்குப் பாத்திரமாயினர். இதற்கு ப்ரதிகோடிகளாகச் சொல்லத் தக்கவர்கள் திவ்யஸூரி - திவ்யப்பிரபந்த - திவ்யதேசங்களில் அவகாஹனமும் மதிப்பு மற்றவர்களான ஸ்மார்த்த மாத்வாதிகளே யாவர். அவர்களைத் தவிர்த்த ஸ்ரீவைஷ்ணவாசாரியர்களுக்கெல்லாம் தென்னாசார்யர்களென்கிற வ்யபதேசம் நிர்விசேஷமாகவுள்ளது. வேதாந்த தேசிகனுட்பட ஸகலாசாரியர்களுக்கும் இந்த வ்யபதேசம் ஸமமான தென்பது தத்துவமுணர்ந்த பெரியார்களுக்கு உடன்பாடு. ... ...

வேதாந்த தேசிகனும் தென்னாசார்ய வகுப்பில் அந்வயித்தவரேயொழிய அவர்க்கென்று தனியேயொரு வகுப்பிருந்ததாக நினைப்பது நியாயத்திற்குச் சேராது. தென்னாசார்யர்களாலேயே தொன்று தொட்டுப் பரிபாலிக்கப்பட்டு வருகிற திவ்யதேசங்கள் பலவற்றில் அவருடைய திவ்யமங்கள விக்ரஹம் ப்ரதிஷ்டை பெற்றும் உத்ஸவாதிகளைப் பெற்றும் வருவது அபலபிக்க முடியாதது. திவ்யதேசங்களில் ஸந்நிதிக்கு வெளிப்பட்ட விடங்களில் அவர்க்கு ஆலய நிர்மாண-மஹோத்ஸவோபலாலனாதிகள் ஆரம்பமாகி எத்தனை ஸம்வத்ஸரமாகியிருக்குமென்று வினவினால் ஆர்ஜவத்துடன் விடை கூறவல்லார் எவ்விதமாக விடை கூறுவரென்றால் நிகழும் நூற்றாண்டில் தானென்பர்; சென்ற நூற்றாண்டிலேயே ஆரம்பமாயிற்று என்றும் சொல்லுவர். உடனே எதற்காக இந்த விச்வாமித்ர ஸ்ருஷ்டிகள்? என்று வினவினால் த்ருப்திகரமான விடை வருமா? என்று பார்க்கவேணும். அறுநூறாண்டுகட்கு முன்பு அவதரித்திருந்த ஆசிரியர்க்கு அந்நாள் தொடங்கி ஒருவிதமான வழிபாடு நடந்துவாரா நிற்க, பிற்பட்ட காலத்தில் (அதாவது மிகவும் ஸந்நிஹிதமான காலத்தில்) திடீரென்று ஒரு கோலாஹலத்தைக் கிளப்பி அஸ்தாநே மாச்சரியத்தை வளரச் செய்யும் செயல்களை நடத்திக் கொண்டு போருவதானது எம்பெருமானுடைய லீலைகளிலே இதுவுமொன்று என்று நினைப்பதற் குறுப்பா மத்தனை யொழிய வேறு பேசத்தானாவதுண்டோ?

காஞ்சீபுரியில் திருக்கச்சி நம்பிகள் ஸந்நிதியுள்ளது. அதைப் பரிபாலிக்கும் பொறுப்பை பஸ்மதாரிகளான சைவர்கள் பரம்பரையாக ஏற்று வருகிறார்கள். அவர்கள் திருக்கச்சி நம்பிகளின் ஸம்பிரதாயம் வேறாயிருக்கின்றதென்பதை யுணா

சாதவர்களல்லர். அந்த ஸம்பிரதாயத்தை மாற்றித் தங்களைப்போல் அவரையும் (அர்ச்சையில்) பஸ்மதாரியாக ஆக்கிவிடவேணுமென்று நினைப்பதாகவோ அத்தற்குரிய சேஷ்டைகள் செய்வதாகவோ இதுவரையில் தெரியவில்லை. காஞ்சியில் மட்டுமன்று; மற்றும் அநேக ஸ்தலங்களிலும் திருக்கச்சி நம்பிகள் பக்கலிலே பரிவு காட்டுபவர்களும் அவர்க்குத் தொண்டுசெய்பவர்களும் சைவர்களாகத்தான் காணப்படுகிறார்கள். அவர்கள் நம்பியின் சின்னங்களை மாறுபடுத்த முயலுவதில்லை; தங்களுடைய சின்னங்களை விட்டு அவரைத் தனியே பிரதிஷ்டை செய்து தாங்கள் தனியாக ஆராதிக்கவும் ஆசைப்படுவதில்லை. ஸகலவித யோக்யதா ஸம்பந்நரான தேசிகனிடத்தில் ஜந்மாந்தர ஸஹஸ்ர நற்றவப் பயனுக் ஒரு வகுப்பினர்க்கு பக்தி விளைந்தது உஜ்ஜீவந ஹேதுவே யென்பதில் ஐயமில்லை. அவ்விசார்ய ஸார்வபௌமனுடைய வழிபாடுகள் தொன்றுதொட்டு எந்தவிதமாக நிகழ்ந்து வருகின்றதென்பதைப் ப்ராமாணிகர்கள் அபலாபம் செய்ய முடியுமா?

முதன் முதலாகத் திருவரங்கம் பெரிய கோயிலில் தேசிக விக்ரஹத்தில் திருமண் விபர்யயம் செய்யவேணுமென்று ஒரு வகுப்பினர்க்குத் தோன்றிற்று. அப்படியே செய்தார்கள். செய்த க்ஷணத்திலேயே ஹாஹாகாரம் ஏற்பட்டது. அந்த விஷமச்செயல் அநீதிதானென்று முடிவு செய்த அரசாங்கப் பிரபுக்கள் அதற்காக ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்கள். அது மூன்று நீதிமன்றங்களிலும் ஊர்ஜிதமாயிற்று. உலகத்தில் எத்தனையோ விஷமச் செயல்களுக்கு எத்தனையோ விதமான சிக்ஷைகள் ஏற்படுவதுண்டு. ஆயிரம் ரூபாய அபராதம் விதிக்கப்பட்டதாகக்காணும் ஸம்பவம் இஃதொன்றுதான். இதனால் தேசிகனுடைய சின்னத்தை மாற்ற முயல்வது மிகப் பெரியதும் தவறு என்பது கையிலங்கு நெல்லிக்கனியாக விளங்கவில்லையா? திருவவதார ஸ்தலத்து ப்ரக்ரியைகளும் ப்ரஸித்தமானவையே. பெரியதொரு வகுப்பில் விவேகி ச்ரேஷ்டர்கள் இல்லையென்று சொல்ல முடியுமா? நெஞ்சாலாவது நினைக்கமுடியுமா? ஆனால் அவர்களின் விவேகம் பயன்படவில்லை.

நெடுநாளாக நாம் வஸ்து ஸ்திதியைப் பலபல விஷயங்களில் எடுத்துக் காட்டுவதுபோல இவ் விஷயத்திலும் மனச்சாக்ஷியை மீறாமல் எடுத்துக் காட்டினதொழிய வேறில்லை. இதற்காக நம்மைச் சிலர் வெறுப்பது யுக்தமாகுமா? இது ப்ராமாணிகமா? அப்ராமாணிகமாக ஆக்ரஹத்தோடு தெரிவிக்கப்படுகிறதா? என்பதையன்றோ ப்ராமாணிக ப்ராஜ்ஞர்கள் பரிசீலிக்க வேணும். நெஞ்சை நடுநிலையில் வைத்து யுக்தாயுக்தங்களை விவேகிக்க வேண்டாவா? வேதத்தின் விபரீத விருத்தமாக வேதபாஷ்யங்கள் தோன்றியுள்ளனவென்று விரிவான விமர்சங்கள் வெளியிட்டேன். ஸ்மார்த்த வைதிக வித்வான்களும் இதை உகக்கிறார்களேயொழிய ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. உண்மைக்குமாறான விஷயங்களை நாம் ஒருபோதும் எழுதமாட்டோம்; நெஞ்சாலும் நினைக்கமாட்டோம். திருப்புட்குழி ஸ்வாமி யென்று போற்றப்படும் மஹான் போல்வார் "அபிநிவேச வசீக்ருத சேதஸாம் பஹுவிதாமபி ஸம்பவதி ப்ரம:" என்கிற ஆளவந்தார் ஸ்ரீஸூக்திக்கேயன்றோ இலக்காகிக் காலங்கழித்தனர். ... *